மாண்புமிகு திரு. செ. மாதவன்: துவக்க விழா செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஹைகோர்ட்டில் மெயின் பில்டிங்கில் ஒரு லிஃப்ட் வேண்டுமென்று கடந்த பத்து வருஷ காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிருர்கள். லீட் ஹவுஸ் பக்கத்தில் ஒவ்வொரு சேம்பருக்கும் இரண்டு மூன்று மாடி ஏற வேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்குப் பத்து முறையாவது ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. புதிய கட்டடம் கட்டுவதோடு கூட இந்த லிஃப்ட் அமைத்துக் கொடுக்க அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்களோடு நானும் படிகளில் ஏறி இறங்கியிருக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் கஷ்டப் பட்டதாகக் காணவில்லை.

திருப்பூர் நீதிமன்றக் கட்டடம்

* 232 வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் இடம் குறைவாக இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இட வசதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இது உயர் நீதிமன்றத்தின் பரிசிலனையில் உள்ளது. உயர்நீதிமன்றம் கோவை (மேற்கு) மாவட்ட நீதிபதியிடம், மாவட்ட முன்சிப்கோர்ட், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், திருப்பூர் இவைகளுக்குப் போதுமான இடவசதி செய்து கொடுப்பதற்கான திட்டத்தையும் மதிப்பீட்டுச் செலவையும் கேட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் பரிசிலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்தப் பரிசிலனை எவ்வளவு காலத்தில் முடிவு பெறும்? முடிவு பெற்ற பிறகு எவ்வளவு விரைவாக திருப்பூர் நகரத்தில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

Sugar from beet-root

* 233 *Q.*—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start Beet Sugar Industry in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.